"எம்மை நன்றாய் இறைவன் படைத்தனன்
தம்மை நன்றாய்த் தமிழ் செய்யுமாறே"

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்

## 25ஆம் ஆண்டறிக்கை

சங்கப் பணி மனை,
இல, 7, 57ஆம் ஒழுங்கை,
உருத்திரா வீதி,
கொழும்பு – 6.

# கொழும்புத் தமிழ்ச் சங்கம்.

## 25 ஆம் ஆண்டறிக்கை.

திருவள்ளுவராண்டு 1998, ஆனி 17 (1 - 7 - 66) தொடக்கம் 1999 கார்த்திகை 7, (23 - 11 - 67) வரையுள்ள காலம்.

ஆட்சிக் குழுக் கூட்டம்.

1 - 7 - 66தொடக்கம் 23 - 11 - 67 வரையுள்ள இக்காலத்தில் 9 ஆட்சிக்குழுக் கூட்டங்கள் நடைபெற்றன.

உறுப்பினர்.

| | |
|---|---|
| இவ்வாண்டு சேர்க்கப்பட்ட சாதாரண உறுப்பினர் தொகை - | 21 |
| சீவியகால உறுப்பினர் தொகை - | 1 |
| இப்பொழுதுள்ள சாதாரண உறுப்பினர் தொகை - | 156 |
| சீவிய கால உறுப்பினர் தொகை - | 65 |

விழாக்கள்;

1. சிலம்புச் செல்வர். மா. பொ. சிவஞானக்கிராமணியார் அவர்களின் 60 ஆம் ஆண்டு நிறைவு விழா 6 - 8 - 66 இல் கொழும்பு, விவேகானந்த சபை, இலக்கிய மன்றம் ஆகியவற்றுடன் சேர்ந்து கொண்டாடப்பட்டது. இவ்விழா விவேகானந்த மகாவித்தியாலய மண்டபத்தில் நடைபெற்றது. சங்கத்தலைவர் திரு. வ,- அருளம்பலம் மா. பொ. சி. அவர்களுக்கு ஆசியுரை வழங்கினர்.

2. தமிழப் பெரியார் நினைவு விழா: கு. வன்னியசிங்கம், சுப்பிரமணிய பாரதியார் வ. உ. சிதம்பரப்பிள்ளை, மறைமலையடிகள், திருவிகலியாணசுந்தரனர் ஆகியோரின் நினைவு விழா 23 - ௯ - 66 இல் சைவமங்கையர் கழகமண்டபத்திற் கொண்டாடப்பட்டது' திருவாளர்கள் இ. இரத்தினம், எஸ். பொன்னுத்துரை, ஈழவேந்தன், எஸ். திருநாவுக்கரசு, செல்வி. எஸ். நாதன் ஆகியோர் பங்குபற்றினர். பாரதியார் பற்றிச் சொற்பொழிவு நிகழ்த்த அன்று சிறப்பாக அழைக்கப்பட்ட 'தீபம்' ஆசிரியர் நா. பார்த்தசாரதி அவர்கள் கூட்டத்துக்கு வரக்காலதாமதமாகியமையால் அவர் பேசுவதைக் கேட்கும் வாய்ப்பில்லாமற் போய்விட்டது. கூட்டத்துக்குச் சங்கத்தலைவர் திரு வ. அருளம்பலம் தலைமை தாங்கினர். பொதுச்செயலாளர் திரு ச. சரவணமுத்து நன்றியுரை கூறினர்.

தமிழ் மூலம் விஞ்ஞான பாடங்கள் கற்றல் என்னும் பொருள்பற்றி இலங்கைப் பல்கலைக்கழகப் பேராசிரியர் ஆ. வீ மயில்வாகனம் அவர்கள். 5-10-66 இல் பேசினார்கள். சங்கம் ஒழுங்கு செய்த ஜீ. சி. ஈ. சாதாரண பரீட்சைக்கான தமிழ் மூல விஞ்ஞானபாட மீட்டல் வகுப்புக்களைச் சைவமங்கையர் கழக மண்டபத்தில் ஆரம்பித்து வைக்கையிலேயே பேராசிரியர் இச்சொற்பொழிவையாற்றினார். விஞ்ஞானபாடங்களின் முக்கியத்துவம் பற்றியும் தமிழ் மூலம் அவற்றைக் கற்றல் எளிது எனவும் அவர் எடுத்துரைத்தார். சங்கத்தலைவர் அக்கூட்டத்திற்குத் தலைமை வகித்தார்.

4. கி. வா. ஜகந்நாதன் 60 ஆம் ஆண்டு மணிவிழா. பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் 1-9-66 இல் நடைபெற்ற மேற்படி விழாவில் சங்கம் பங்குபற்றியது. இவ்விழாவை கி. வா. ஜகந்நாதன் மணிவிழாக் குழுவினர் ஒழுங்கு செய்திருந்தனர். விழாக்கூட்டத்தில் சங்கத்தலைவர் திரு. வ. அருளம்பலம் அவர்கள் கி. வா. ஜகந்நாதன் அவர்களுடைய தமிழ்த் தொண்டைப்பாராட்டி அன்னாருக்கு ஆசியுரை வழங்கினார்கள்.

5. 'சங்ககால வாழ்க்கை நெறி' என்னும் பொருள்பற்றி கி. வா. ஜகந்நாதன் அவர்கள் 6-7-67 இல் சங்கத்தின் அழைப்பின் பேரில் சிறப்புச் சொற்பொழிவாற்றினார்கள். சைவமங்கயர் கழக மண்டபத்தில் நடைபெற்ற இக்கூட்டத்திற்குச் சங்கத்தலைவர் தலைமை வகித்தார். சங்க இலக்கியங்கள் பற்றியும் அக்கால வாழ்க்கை முறைகள் பற்றியும் விரிவான ஆழ்ந்த கருத்துப் பொதிந்த ஒரு சொற்பெருக்கைக் கேட்கும் வாய்ப்பு அன்று எமக்குக் கிடைத்தது. கூட்டமுடிவில் திரு. ஈழவேந்தன் நன்றியுரைகூறினார்.

நூல்நிலையமும்படிப்பகமும்.

இவ்வான்டு நூல் நிலையத்திற் சில ஆக்க வேலைகள் நடைபெற்றுள்ளன. முன்னர் நூல்கள் உதவியவர்கள் பெயர்களையும் அந்நூல்களின் பெயர்களையும் கொண்ட பதிவேடு எழுதப்பட்டிருக்கிறது. புதிதாக வந்த நூல் களுக்காக இரு புதிய அலுமாரிகள் வாங்கப்பட்டுள்ளன.

திரு. இ. பொ. செல்லையா, திரு. சி. எஸ். நவரத்தினம், திரு. வே. சிவக்கொழுந்து, திரு. சோ. நடராச, திரு. சு. நாகரத்தினம் ஆகிய அன்பர்களிடமிருந்து அமெரிக்கத் தூதுவரகம், சோவியத்துத் தூதுவரகம் ஆகிய நிறுவகங்களிடமிருந்தும் நூல்கள் அன்பளிப்பாகக் கிடைத்தன. திரு. சு. நாகரத்தினம் அவர்கள் 500 க்கு மேற்பட்ட சிறந்த நூல்களைத் தந்துதவியுள்ளார். இவர் இச்சங்க ஆயுள் உறுப்பினராவர். சங்கம் 300 ரூபாவுக்கு மேற்பட்ட பெறுமதியுள்ள தமிழ் இலக்கண, இலக்கிய நூல்களை வாங்கியுள்ளது. பிரித்தானிய, அமெரிக்கா, சோவியத்துத் தூதுவரகங்கள் சங்கத்தின் வேண்டு கோளுக்கிணங்கத் தத்தம் சஞ்சிகைகளைப் படிப்பதற்கு ஒழுங்காக அனுப்பி வருகின்றன.

நூல்களையும் பத்திரிகைகளையும் பயன்படுத்துவோர் தொகை இவ்வாண்டு கூடியுள்ளது. பல்வேறு அரசாங்க திணைக்களங்களினதும் நிறுவனங்களினதும் தமிழ்மொழி ஆக்கமுயற்சிகளுக்கும் உயர்தரத்தேர்வுகளுக்குத்தமிழைக்கற்பவர்களுக்கும் இந்நூல்நிலையம் பெரிதும் உதவி வருகிறது சிறப்பாகக் கல்வி நூல் வெளியீட்டுத் திணைக்களத்தினர் இந்நூல் நிலையத்தைப் பயன்படுத்துகின்றனர்.

நூல்கள் உதவியவர்களுக்கும், முக்கியமாகத் திரு. சு. நாகரத்தினம் அவர்களுக்கும், அமெரிக்க, பிரித்தானிய, சோவியத்துத் தூதரகங்களுக்கும் சங்கம் பெரிதும் கடமைப்பட்டுள்ளது

நூல் நிலையத்துக்கு மேலும் பல நூல்களைத் தந்து உதவுவதுடன் நூல் நிலையத்தை நன்கு பயன்படுத்துமாறும் உறுப்பினர்களைச் சங்கம் வேண்டிக்கொள்கிறது.

தமிழ் வகுப்புக்கள்:

புலவர் கருணாலய பாண்டியனார் அவர்கள் வாரத்தில் ஒரு நாள் (நோன்மதி நாளுக்கு மூன்றாம் நாள்) பிற்பகல் 5 மணி முதல் 7 மணி வரையும் தமிழ் இலக்கண இலக்கிய வகுப்புக்கள் நடாத்தி வருகிறார்கள். இப்பொழுது தொல்காப்பியமும், சிவஞான பாடியமும் படிப்பிக்கப்பட்டு வருகின்றன. தமிழைக் கசடறக் கற்று ஆய்ந்தறிந்த இப்பெரும் புலவரிடம் பாடங்கேட்டல் ஓர் அரும்பேறாகும். இந்த வாய்ப்பைப் பயன்படுத்துவோர் தொகை மிகக் குறைவாகவிருப்பது வருந்தத்தக்கது.

தமிழ்மூல விஞ்ஞான பாட வகுப்புக்கள்.

கல்விப்பொதுத் தராதரப் பரீட்சைக்காகிய விஞ்ஞான பாடங்களைத் தமிழ்மூலம் சிறந்த முறையிற் கற்பிக்கக்கூடிய ஆசிரியர் மிகக்குறைவாக விருப்பதனால் தம் பிள்ளைகள் அப்பாடங்களை நன்கு படிக்க முடியவில்லையெனப் பல பெற்றோரும் எமது சங்க உறுப்பினர் சிலரும் தெரிவித்தமையால் அக்குறையைப் போக்கும் நோக்கத்துடன் சென்ற டிசம்பர் மாத ஜீ. சி. ஈ. சாதாரண பரீட்சைக்கு உதவக்கூடிய வாரஇறுதி மீட்டல்வகுப்புக்களை, தகுந்த ஆற்றலும் அனுபவமும் வாய்ந்த விஞ்ஞானப்பட்டதாரி ஆசிரியர்களைக் கொண்டு பரீட்சார்த்தமாக பரீட்சைக்கு முந்திய இரண்டு மாதமும் நடத்தினோம். நாம் எதிர்பார்த்ததிலும் பார்க்கப் பெரும் அளவான மாணவர் வகுப்புக்களிற் சேர்ந்து எமக்கு உற்சாகமளித்தனர். இவ்வகுப்புக்கள் சைவமங்கையர் கழக வகுப்பறைகளில் நடைபெற்றன.

பல பெற்றோரின் வேண்டுகோளின்பேரில் அடுத்துவரும் ஜீ. சி. ஈ. பரீட்சைக்காகிய பின்வரும் பாடங்களில் இப்பொழுது மீட்டல் வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன: உயிரியல்

இரசாயனவியல், பௌதிகவியல், தூயகணிதம், பிரயோக கணிதம், ஆங்கிலம். இவ்வகுப்புக்கள் எமது சங்கப்பணிமனையிலேயே நடத்தப்படுகின்றன.

**ஈழத் தமிழர் வரலாறு:**

இவ்வரலாற்றினைத் தகுந்த முறையில் எழுதி வெளியிட வேண்டுமெனச் சில ஆண்டுகளுக்கு முன் தொடங்கப்பட்ட முயற்சி இன்னும் பயனளிக்காமலேயிருக்கிறது. ஆற்றலும் அனுபவமும் வாய்ந்த சில தமிழ் அறிஞர்களின் உதவியை நாம் நாடியபோதும் அவர்களின் ஆதரவு கிடைக்கவில்லை. இந்நாட்டின்முன்னேற்றத்திற்கும் சுதந்திரத்திற்கும் தமிழ்ப் பெரியார்கள் ஆற்றிய அரும்பெரும் தொண்டுகளைப் பலர் மறந்தும் சில வரலாற்று ஆசிரியர்கள் வேண்டுமென்றே, அறியாமையினாலோ, தமிழ்ப் பெரியார்கள் ஆற்றிய தொண்டுகளுக்குத் தம் நூல்களில் இடமளிக்காமலும் வருவதினால் இத்தகைய ஒரு வரலாற்று நூல் அவசியமெனத் தமிழ்மக்கள் பலர் கருதுகின்றனர்.

**தமிழ் மக்கள் உரிமைக்கான நடவடிக்கைகள்.**

சில அரசாங்கத் திணைக்களங்கள் இலங்கை மத்தியவங்கி பாடசாலைகள், கூட்டுத்தாபனங்கள் ஆகியன தமிழை ஒதுக்குவதையறிந்து அவ்வப்போது நடவடிக்கை யெடுத்துவந்துள்ளது. எமது சங்கம். இந்நடவடிக்கைகளின் விளைவாகச் சில தற்காலிக நன்மைகளேற்பட்ட போதிலும் நிரந்தரமான நன்மைகளுண்டாயினவா வென்பது சந்தேகமே. தெய்வம் விடைகொடுத்தாலும் பூசாரி விடைகொடான் என்ற பாங்கில் அரசாங்கம் தமிழ் மொழிக்குச் சில நியாயமான இடம் கொடுக்கும் நோக்கமுடையதாயிருந்தபோதிலும் ஆங்காங்கு முக்கிய நிர்வாக இடங்களில் அமர்ந்துள்ள அரசாங்கம் தாபனங்களின் ஊழியர் சிலர் அந்த நோக்கத்திற்கு எதிராகவே நடந்து கொள்கின்றனரெனத் தெரியவருகிறது. முக்கிய நிர்வாக இடங்கள் இப்பொழுது தமிழ் உத்தியோகத்தருக்குக் கொடுபடுவதில்லையெனவும் தற்செயலாக அத்தகைய இடங்களின் தமிழ் உத்தியோகத்தர் இருந்தால் அவர்கள் தமிழ்பற்றி எதுவும் பேசவோ செய்யவோ பயந்து. வாளாவிருந்து விடுகின்றனர் எனவும் கருத்து நிலவுகிறது. தமிழ் மொழியைப் பேணவேண்டும் தமிழிலேயே இயன்றவரையில் அரசாங்கத்திடம் நமது அலுவல்களை வைத்துக்கொள்ளவேண்டும் என்ற உணர்ச்சி தமிழ் மக்களிடையில் மிகக்குறைவு போலத்தெரிகிறது. எமது சங்கம் எடுத்த பெரும் முயற்சி காரணமாக வெள்ளவத்தை அஞ்சல் நிலையத்திலிருந்து தந்திகளைத் தமிழில் அனுப்பும் வசதிசெய்யப்பட்டுள்ளது. இந்த வசதியைப் பயன்படுத்துவோர் தொகை மிகக்குறைவு, இது தமிழ் மக்களின் தமிழ் மொழி பற்றிய உணர்ச்சி எத்தகையது என்பதற்கு ஓர் எடுத்துக்காட்டாகும்.



**சங்கப்பணிமனை.**

பணிமனையில் இவ்வாண்டு ஒரு புதிய மலசலகூடமும் ஒரு பெரிய அறையும் கட்டப்பட்டுள்ளன. சங்க ஆட்சிக்குழுக் கூட்டம், தமிழ் வகுப்புக்கள் முதலியன நடக்கும் பொது அறைக்கு மின் விசிறியும் மேலதிக விளக்குகளும் போடப்பட்டுள. ஒரே நேரத்தில் இரண்டு கூட்டங்களோ வகுப்புகளோ நடத்தக் கூடியதாக மேசை, வாங்கு முதலிய தளபாடங்களும் செய்யப்பட்டுள. சங்கப் பொதுக்கூட்டங்கள், விசேட கூட்டங்கள் ஆகியவற்றையும் சங்கப் பணிமனையிலேயே நடத்தக் கூடியதாக ஒரு மண்டபம் அமைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. இந்த மண்டபத்தை அமைக்கச் சங்க உறுப்பினர், தமிழ் அபிமானிகள் யாவரதும் ஒத்துழைப்பும் பண உதவியும் பெரிதும் தேவை.

சங்கப் பணிமனையிருக்கும் 57 ஆம் ஒழுங்கை மிக ஒடுங்கியதாக விருப்பதனாலும் மழைகாலத்தில் வெள்ளம் தேங்கிச் சேறாக விருப்பதனாலும் இரவில் வெளிச்சமில்லா திருப்பதனாலும் எமது சங்க நடவடிக்கைகளுக்குப் பெரும் இடைஞ்சல் விளைகிறது. இந்த ஒழுங்கையை விசாலமாக்கித் திருத்துமாறு கொழும்பு மாநகரசபையை வற்புறுத்தி வருகிறோம்.

சங்கத்தின் அலுவல்கள் இப்பொழுது பெருகிக் கொண்டுவருவதானால் ஒரு தொலைபேசி அவசியம் வேண்டுமென ஆட்சிக்குழு தீர்மானித்ததன் பேரில் அவ்வாறு ஒன்றைத் தந்துதவுமாறு தொலைபேசித் திணைக்களத்திற்கு விண்ணப்பம் செய்துள்ளோம். விரைவில் இது கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

**நன்றி**

மேலே குறிப்பிட்ட பணிகளைச் செவ்விதிற் செய்து முடிப்பதற்குப் பல்லாற்றாலும் உறுதுணையாயிருந்த உறுப்பினர்க்கும், சங்கத்தின் முயற்சிகளில் நேர்முகமாகவும் மறை முகமாகவும் கலந்து கொண்டு பணிபுரிந்த ஏனைய அன்பர்க்கும், சங்கத்தின் விழாக்களையும் கூட்டங்களையும் நடாத்துவதற்குத் தங்கள் மண்டபத்தைத் தந்ததுதவிய சைவமங்கையர் கழகத்தினர்க்கும், சிறந்த முறையில் தமிழ் வகுப்புக்களை நடத்தும் புலவர் பாண்டியனார் அவர்களுக்கும், எமது வேண்டுகோளுக்கிணங்கி விஞ்ஞான ஆங்கில பாட மீட்டல் வகுப்புக்களைச் சிறப்புடனும் பெரும் சிரமத்துடனும் நடத்திவரும் ஆசிரியர்க்கும், சங்கத்தின் இப்புதுச் சேவைக்குப்பெரும் ஆக்கமும் ஊக்கமுமளித்த உறுப்பினர், மாணவர் பெற்றோர் ஆகியோர்க்கும், சங்கத்தின் அறிக்கைகள் தீர்மானங்கள் முதலியவற்றைத் தம் செய்தித்தாள்களில் வெளியிட்டு எமக்கு ஊக்கமளிக்கும் ஆசிரிர்களுக்கும் சங்கத்தின் உளம் கனிந்த நன்றி உரியதாகுக.

வாழிய தமிழர்! வாழிய தமிழ் மொழி வாழி தமிழ்ச் சங்கம்!

7, 57 ஆம் ஒழுங்கை,<br>
கொழும்பு — 6<br>
23 - 11 - 67.

ச. சரவணமுத்து,<br>
கௌரவ பொதுச் செயலாளர்<br>
ஆட்சிக்குழுவிற்காக.

ஜீ. இராசதுரை பி. ஏ. (லண்), எப். சீ. ஏ.
சாட்டேட் கணக்காளர்

கொழும்பு.

# கொழும்புத் தமிழ்ச் சங்கம் (வரைவுளது) வெள்ளவத்தை

1966 திசம்பர் 31ம் தேதியுடன் முடிவடையும் ஆண்டுக்குரிய வரவு செலவுக் கணக்கு

| செலவு | ரூ - ச | வரவு | ரூ - ச |
|---|---|---|---|
| சந்தா சேகரிப்பாளர் கழிவு | 249-89 | உறுப்பினர் சந்தாப் பணம் | 1,068-00 |
| கூட்டங்களும் விழாக்களும் | 354-81 | நன்கொடைகள் | 1,760-00 |
| மாநகரசபை வரி | 235-91 | கட்டிடநிதி நன்கொடைகள் | 1,800-39 |
| மின்சாரம் | 184-20 | பலவித வருமானம் | 80-15 |
| செய்தித் தாள்கள் | 52-40 | இலங்கை வங்கிக் கட்டுப் பணக் கணக்கு வட்டி | 535-46 |
| அச்சுக்கூலி, கடுதாசி முதலியன | 89-11 | அஞ்சல் அலுவலகச் சேமிப்புக் கணக்கு வட்டி | 18-40 |
| அஞ்சல் தந்திச்செலவு | 172-30 | | |
| திருத்த வேலைகள் | 62-20 | | |
| வகுப்புகள் | 7-90 | | |
| கணக்கியற்செலவு | 50-00 | | |
| ★ பலவிதச் செலவு இணைக்கப்பட்டுள்ள பட்டியற்படி | 145-35 | | |
| பெயர்ப்பலகை மைதீட்டல் | 83-30 | | |
| செலவுபோக எஞ்சிய வருமானம் | 3,575-03 | | |
| ரூ. | 5,262-40 | ரூ | 5,262-40 |

1966, திசம்பர் 31இல் உள்ளபடியான ஐந்தொகைக் கணக்கு

| பொறுப்பு | | | இருப்பு | | |
|---|---|---|---|---|---|
| மூலதனக் கணக்கு: | | | காணியும் கட்டடங்களும் | | |
| சென்ற ஐந்தொகைத் தாளின்படி | 31,910-38 | | சென்ற ஐந்தொகைத்தாளின்படி | | 22,255 00 |
| கூட்டி: செலவுபோக எஞ்சிய வருமானம் | 3,575-03 | 35,485-41 | தளபாடம் முதலியன | | |
| நூல் நிலைய வைப்புப் பணம்: | | | சென்ற ஐந்தொகைத்தாளின்படி | 2,271-73 | |
| சென்ற ஐந்தொகைத்தாளின்படி | 35-00 | | கூட்டி: அலுமாரி வாங்கியது | 175-00 | 2,446-73 |
| கூட்டி: மேலதிகம் | 15-00 | 50-00 | நூல்கள்: | | |
| | | | சென்ற ஐந்தொகைத்தாளின்படி | 923-65 | |
| | | | கூட்டி: மேலதிகம் | 3-50 | 927-15 |
| | | | மலர்: | | |
| | | | சென்ற ஐந்தொகைத்தாளின்படி | | 246-70 |
| | | | வைப்புப் பணங்கள்: | | |
| | | | மின்சாரம் | | 100-00 |
| | | | சில்லறைக்கடன்கள்: | | |
| | | | சென்ற ஐந்தொகைத்தாளின்படி | | 197-85 |
| | | | காசு: கையில் | | 1,023-37 |
| ரூ. | | 35,535-41 | இலங்கை வங்கி நடப்புக் கணக்கில் | | 2,550-06 |
| | | | இலங்கை வங்கிச் சேமிப்புக் கணக்கில் | | 5,629-06 |
| | | | அஞ்சல் அலுவலகச் சேமிப்புக் கணக்கில் | | 159-49 |
| | | | ரூ. | | 35,535-41 |

[illegible]றைய தேதிய அறிக்கைக்கு அமைவாகச் சரியென உறுதிப்படுத்தப்பட்டது.

ஜீ. இராசதுரை,
சாட்டேட் கணக்காளர்

சரியென உறுதிப்படுத்தப்பட்டது.

கொழும்பு,
967, நவம்பர், 20ஆம் தேதி.

வை. பொன்னுச்சாமி
கௌரவ பொருளாளர்

| | |
|---|---|
| ★ தட்டச்செழுத்துச் செலவு | 25-05 |
| தேங்காய் பிடுங்கியது | 14-50 |
| கண்ணாடி ஓடுகள் | 20-00 |
| தோட்டம் துப்பரவு செய்தது | 23-00 |
| திருத்தவேலைகள் (கூரையும் பூட்டும்) | 15-55 |
| சில்லறைச் சாமான்கள் | 24-40 |
| சீமேந்தும் மணலும் | 22-85 |
| ரூ. | 145-35 |

இராசா அச்சகம்,
வெள்ளவத்தை.